**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. STC.No. 67 of 2021**

**Defence Side Witness : DW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திரு. சரவணன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**Dated.29.07.2026**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மலேசியாவில் வசித்து வந்து சுய தொழில் செய்து வருகிறேன். நான் இந்த வழக்கில் 3ம் எதிரி ஆவேன். நான் 18.12.2012ம் ஆண்டிலிருந்து 11.08.2015 வரை KAIZER TRADE VENTURES என்ற நிறுவனத்தில் பங்குதாரராக இருந்தேன். நான் வழக்கு காசோலைகளை 2014ம் ஆண்டு புகார்தாரரிடம் கொடுத்தேன். நான் 2014ம் ஆண்டு புகார்தாரரிடம் 8–10 காசோலைகளை கொடுத்தேன். நான் புகார்தாரரிடம் கொடுத்த காசோலைகளில் சுதா எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் பெயரை எழுதி கொடுத்தேன். அந்த காசோலைகளில் நான் முதலில் சுதா எண்டர்பிரைசஸ் என்று எழுதி விட்டு பின்னர் அதை சுதா எண்டர்பிரைஸ் என திருத்தம் செய்து அந்த திருத்தம் செய்த இடத்தில் நான் கையொப்பம் செய்தேன். நான் புகார்தாரரிடம் கொடுத்த காசோலைகளில் கையொப்பம் செய்து சுதா எண்டர்பிரைஸ் என்ற பெயரை மட்டும் எழுதி கொடுத்தேன். மற்ற விவரங்களை நான் எழுதவில்லை. மேற்கொண்டு 2014ம் வருடம் வெற்றுத் தாள்களில் கையொப்பம் செய்து புகார்தாரரிடம் கொடுத்தேன்.

நான் 2012ம் ஆண்டு 100 PLUS என்ற குளிர்பானத்தை மலேசியாவிலிருந்து கொள்முதல் செய்து இந்தியாவில் சில்லறை விற்பனை செய்யும் தொழிலை KAIZER TRADE VENTURES என்ற பெயரில் ஆரம்பித்தேன். அந்த தொழிலுக்காக நாங்கள் நிறைய முகவர்கள் மூலமாக குளிர்பானத்தை சில்லறை விற்பனை செய்தோம். அந்த முகவர்களில் சுதா எண்டர்பிசைஸ்–ம் ஒரு முகவர் ஆவார். எங்கள் நிறுவனமும், எங்களது தயாரிப்பும் இந்திய சந்தைக்கு புதிது என்பதால் எங்களிடம் தொழில் செய்யும் முகவர்கள் தொழில் பிணையத்திற்காக எங்களிடம் காசோலைகளை கேட்டார்கள். நான் புகார்தாரரிடம் தொழில் பிணைத்திற்காக வழக்கு காசோலைகள் மற்றும் வெற்றுத் தாளில் கையொப்பம் செய்து கொடுத்தேன். நான் 11.08.2015ம் ஆண்டு KAIZER TRADE VENTURES என்ற நிறுவத்திலிருந்து விலகிவிட்டேன். 2015ம் ஆண்டு நான் KAIZER TRADE VENTURES என்ற நிறுவனத்திலிருந்து விலகிய பின்பு எனக்கும், KAIZER TRADE VENTURES என்ற நிறுவனத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. இந்த வழக்கு தொடர்பாக எனக்கு எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பப்படவில்லை. நாங்கள் மலேசியாவிலிருந்து 100 PLUS என்ற குளிர்பானத்தை இறக்குமதி செய்வோம். அதை இங்குள்ள முகவர்களுக்கு நாங்கள் சில்லறை விற்பனைக்காக கொடுப்போம். அவ்வாறு இறக்குமதி செய்த குளிர்பானத்தை எங்களிடமிருந்து பெறுவதற்காக முகவர்கள் எங்களுக்கு பணம் கொடுப்பார்கள். எனக்கும், புகார்தாரருக்கும் இடையே எந்த கொடுக்கல், வாங்கலும் இல்லை. நான் தொழில் பிணையத்திற்காக கொடுத்த காசோலைகளை மோசடியாக பயன்படுத்தி புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். புகார்தாரர் எந்த பொருட்களையும்

எங்களுக்கு திருப்பி அனுப்பவில்லை. புகார்தாரர் என் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**குறுக்கு விசாரணை (புகார்தாரர் தரப்பில்)**

இந்த வழக்கில் 2ம் எதிரி செல்லப்பன் எனது தகப்பனார் என்றால் சரிதான். KAIZER TRADE VENTURES என்ற நிறுவனத்தில் என்னையும், எனது அப்பாவையும் தவிர வேறு பங்குதாரர்கள் இல்லை என்றால் சரியல்ல. குருசாமி என்ற நபரும் பங்குதாரராக உள்ளார். KAIZER TRADE VENTURES என்ற நிறுவனம் தற்போது செயல்பாட்டில் உள்ளதா என்றால் இல்லை. KAIZER TRADE VENTURES என்ற நிறுவனம் தற்போது செயல்பாட்டில் இல்லை என்பது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் KAIZER TRADE VENTURES என்ற நிறுவனத்தை எனது அப்பா தான் நடத்தி வந்தார். அவர் தற்போது அந்த நிறுவனத்தை நடத்தவில்லை. KAIZER TRADE VENTURES என்ற நிறுவனத்தில் நடக்கக்கூடிய செயல்கள் குறித்து எனக்கு முழுமையாக தெரியும் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றாலும், எனது நிறுவனமான KAIZER TRADE VENTURES நிறுவனத்தின் காசோலை என்றாலும் சரிதான். அந்த காசோலையில் கையொப்பம் செய்யும் அதிகாரம் எனக்கு உள்ளது என்றால் சரிதான். நான் 11.08.2015 அன்று KAIZER TRADE VENTURES என்ற நிறுவனத்திலிருந்து விலகிவிட்டதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக புகார்தாரருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. நான் 11.08.2015 அன்று KAIZER TRADE VENTURES என்ற நிறுவனத்திலிருந்து விலகிவிட்டதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக

நான் வங்கி கணக்கு வைத்திருக்கும் சிட்டி யூனியன் பேங்க், திருவாஞ்சேரி கிளைக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. நான் KAIZER TRADE VENTURES என்ற நிறுவனத்திலிருந்து விலகியதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக **14.08.2026** அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.29 17:51:09 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி